செ.வெ.எண்-17 நாள்-10.01.2020

**அரியலூர் மாவட்டத்தில் வளர்ச்சித்துறையில் வீடுகள் கட்டும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.**

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட மணப்பத்தூர் மற்றும் பெரியாக்குறிச்சி ஆகிய கிராமங்களில் நடைபெற்று வரும் பாரத பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் பாரத பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் 1356 வீடுகள் தேர்வு செய்யப்பட்டு, தலா ரூ.1 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் 829 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 527 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இன்று (10.01.2020) செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கட்டப்பட்டு வரும் வீடுகள் தரமானவைகளாக எனவும், சரியான அளவில் கட்டப்பட்டுள்ளனவா எனவும் பார்வையிட்டு, ஆய்வு செய்யப்பட்டு, பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், கழிநீர் வாய்க்கால்கள், தெருவிளக்கு, குடிநீர், சாலைகள் போன்ற அடிப்படை வசதிகள் சீரமைக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவாஜி, ஸ்ரீதேவி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**